# <u>DEPOSTITION OF WITNESS</u>

# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,</u>

# <u>NAGERCOIL</u>

## <u>O.S. No. 115 of 2015</u>

| | | |
|---|---|---|
| பெயர் | - திவான் | பி.வா.சா.1 |
| தந்தை பெயர் | - ராஜு | |
| கிராமம் | - நாகர்கோவில் | |
| வட்டம் | - அகஸ்தீஸ்வரம் | |
| தொழில் | - மண்டல துணை வட்டாட்சியர் | |
| வயது | - 34 | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 17.03.2022.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் அகஸ்தீஸ்வரம் மண்டல துணை வட்டாட்சியராக எப்போது இருந்து பணி புரிந்து வருகிறேன் என்றால் ஜுன் மாதம் 2021 ல் இருந்து பணி புரிந்து வருகிறேன். பிராது தபசில் சொத்தை நான் முதன் முதலாக எப்போது பார்த்தேன் என்றால் 2021 ம் ஆண்டு டிசம்பர் மாதம் பார்த்தேன். பிராது தபசில் சொத்திற்கு மேற்கு பக்கத்தில் தென்வடலாக ஒரு பிரதான சாலை உள்ளது என்றால் சரி தான். அந்த பிரதான சாலை 22 அடி அகலம் இருக்கும் என்றால் சரி தான். அந்த சாலைக்கு வடக்கு பக்கம் 15 அடி அகலத்தில் ஒரு தார் சாலை உள்ளது என்றால் 10 அடி அகலத்தில் இருக்கும். அந்த சாலையின் அகலம் 15 அடி அகலம் இருக்கும் என்றும், நான் தவறுதலாக 10 அடி அகலம் இருக்கும் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து வீட்டை ஒட்டி தெற்கு பக்கம் உள்ள வீடு யாருடையது என்றால் தெரியவில்லை. அது கான்கிரீட் வீடா ஓடு வீடா என்றால் தெரியவில்லை. அந்த வீட்டிற்கு யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ல் உள்ள

முதல் புகைப்படத்தில் உள்ளது தான் வாதியின் வீடு என்றால் ஸ்தலத்தில் வேறு மாதிரியாக உள்ளது. ஆனால் புகைப்படத்தில் உள்ள சாலை சரியாக தான் உள்ளது. பிராது தபசில் சொத்தின் வடக்கு பக்கத்தில் கிழக்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் அந்த சாலை செல்கிறது என்றால் சரி தான். பிராது தபசில் சொத்தின் கிழக்கு பக்கத்தில் ஒரு வீடு உள்ளது என்றால் சரி தான். அந்த வீடு கான்கிரீட் வீடு என்றால் நினைவில்லை. வடக்கு தெருவில் வடக்கு பக்கம் சுமார் 10 செண்ட் பரப்பளவு உள்ள இடத்தில் 2000 சதுர அடி அளவு உள்ள மாடியுடன் கூடிய வீடு உள்ளது என்றால் உள்ளது. ஆனால் அதன் பரப்பளவு தெரியாது. அந்த வீட்டின் நான்கு எல்லையிலும் காம்பவுன்ட் சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அந்த வீட்டின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அதனை நான் பார்க்கவில்லை. புல எண். 333/2 க்கு யார் பெயரில் எவ்வளவு பட்டா கொடுக்கப்பட்டது என்ற விபரம் எங்கள் அலுவலகத்தில் உள்ளது என்றால் அ பதிவேட்டில் இல்லை. இலவச வீட்டு மனை பட்டா பதிவேட்டில் இருக்கும். அந்த இலவச வீட்டு மனை பட்டா பதிவேட்டை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த பகுதியில் சுமார் 150 நபர்களுக்கு இலவச பட்டா வழங்கப்பட்டது என்றால் புல எண்.333/2 ல் வழங்கப்படவில்லை. 333/3 மற்றும் 333/4 க்கு வழங்கப்பட்டுள்ளது. 333/3 மற்றும 333/4 ஆகியவை முதலில் புல எண். 333/2 ல் இருந்து நத்தம் புறம்போக்காக 2000 -ம் வருடத்தில் மாற்றப்பட்டது என்றால் சரி தான். வருவாய் துறை ஆவணங்களை ஆய்வு செய்தால் எத்தனை நபர்களுக்கு இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியும் என்றால் சரி தான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).